புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சுப்ரபாரதிமணியன் சிறுகதையில் பெண்ணிய சிந்தனை

ந. பிரபாகரன்
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620 020.
( பாரதிதாசன் பல்கலைக்கழகம்
இணைவு பெற்றது)

முனைவர் எஸ்.நாகூர்கனி
நெறியாளர் & முதுகலை மற்றும்
தமிழாய்வுத் துறை, ஜமால் முகமது கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-620 020.
( பாரதிதாசன் பல்கலைக்கழகம்
இணைவு பெற்றது)

ஆய்வுச்சுருக்கம்.

பெண்கள் பற்றிய சிந்தனைகள் என்பது இன்று மட்டுமல்ல பல்லாண்டு காலமாக அவர்களிடத்தில் பல மாற்றங்களை இச்சமூகம் ஏற்படுத்திக் கொண்டு தான் இருக்கிறது. இதில் பெண்கள் என்றாலே பல போராட்டங்களைச் சந்திக்கும் ஒரு போராளியாக புரட்சியாளியாக தான் பெறுகின்றனர் பெண் சமூகத்திற்கு என்று அன்றைய பாரதி முதல் இன்றைய சமூக ஆர்வலர்கள் வரை பெண்களின் நிலை பற்றி பல சிந்தனைகளில் வெளி கொண்டு தான் இருக்கின்றனர் மாற்றம் என்பதை அனைவரும் அறிந்து அதன்படி பெண்களின் சிந்தனைகள் எந்த விதத்தில் அமைந்துள்ளது என்பதை மையமாகக் கொண்டு ஆய்வுகச் சுருக்கம் அமைந்துள்ளது.

சுருக்க குறியீடு:

பெண்ணியச் சிந்தனை, கட்டுப்பாடுகள், அடக்கமுறைகள், சூழலியல் பார்வை, பாலினப் பாகுபாடு, மனுநீதி கொள்கை, தவறான போக்குகள், இடர்பாடுகள், புதுமைப்பெண், பெண்ணியப் பார்வை, கற்பு, சகிப்புத்தன்மை, பெண்ணின் பெருமை, வாழக்கை தியாகம்.

## முன்னுரை:

பெண்கள் என்றாலே பெரும் மதிப்பும், முக்கியத்துவமும் கொண்டு விளங்கும் சமூகத்தில் காணப்படுபவர்கள். பெண்கள் மீதான அடக்குமுறைகளுக்கும் சுற்றுச்சூழலியல் சீர்கேட்டும் தொடர்பும் உண்டு. முதலாளித்துவம், தொழில்மயமாக்கல், ஆண்மையச் சிந்தனை ஆகிய மூன்றும் இணையும் புள்ளியிலிருந்து இதை அணுக வேண்டும். மற்றைய அனைத்தும் அடக்கி ஆளப்பட வேண்டும் என்கிற எண்ணம் இந்தப் புள்ளியிலிருந்தே தொடங்குகிறது என்பதை விளக்கும் வகையில் பெண்ணியச் சிந்தனையைப் பற்றி இவ்வாய்வின் வழி விளக்கவுள்ளன.

## பெண்ணியம் பற்றிய வரையறை

இன்றைய உலகில் பெருகி வரும் கருத்தோட்டங்களில் பெண்ணியமும் ஒன்று. பெண்களை அழுத்தி வைத்திருக்கும். சமூகக் கட்டுப்பாடுகளும் கருத்துப் போக்கும் மாற வேண்டும் என்னும் எண்ணத்தோடு பேசுவதும் எழுதுவதும் போராடுவதும் பெண்ணியக் கொள்கைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

“பெண்ணியத்தையும் சூழலியல் பாதுகாப்பையும் இணைத்து உருவாக்கப்பட்ட கருத்தாக்கமே சூழலியல் பெண்ணியம் (ECO Feminism) ஃபிரான்சுவாத உபன் என்கிற பெண்ணியவாத 1974- இல் முன் வைத்த கருத்தாக்கம் இது.”

பாலின சமூக பொருளாதார மற்றும் அரசியல் சமத்துவத்தில் நம்பிக்கை பெரும்பாலும் மேற்கில் தோன்றியிருந்தாலும் பெண்ணியம் உலகம் முழுவதும் வெளிப்படுகிறது மற்றும் சார்பாக செயல்படும் பல்வேறு நிறுவனங்களால் பிரதிநித்துவப்படுகிறது.

பாலின ஏற்றத்தாழ்வு உள்ள ஒரு சமூகத்தில் சூழலியல் பெண்ணியக் கருத்தாக்கங்கள் ஆண், பெண் என்கிற இருமையை அதிகரிக்கின்றன என்பது ஒரு குற்றச்சாட்டு. எல்லாப் பெண்களையும் சூழலியல் பெண்ணியம் ஒரே தட்டில் வைக்கிறது என்பது அடுத்த குற்றச்சாட்டு சாதி, இனம், மதம், பாலீர்ப்பு என்று பெண்களுக்குள்ளே பல அடுக்குகள் உண்டு.

பெண் திருமணத்திற்கு முன்னால் தந்தையைச் சார்ந்திருக்க வேண்டும்; திருமணம் ஆன பிறகு கணவனைச் சார்ந்திருக்க வேண்டும்.; முதுமையில் பெற்ற பிள்ளையைச் சார்ந்திருக்க வேண்டும் என்று கூறுகிறது மனுநீதி

பெண்ணியம் என்பது இன்று ஒரு சிலரால் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. அல்லது மேலோட்டமாக அணுகப்படுகின்றது. இவ்விரு போக்குக்களுக்கும் இல்லாமல் பெண்ணியத்தைச் சரியாகப் புரிந்து கொள்வது இன்றைய சூழலில் இன்றியமையாததாகும்.

மேலை நாடுகளிலும் ‘மரபு சார்ந்த பெண்ணியம்’ என்ற கோட்பாடு உருவாகிவிட்ட நிலையில் நாம் பெண்ணியம் என்பது ஆணுக்கு எதிரானது. இல்லற வாழ்க்கைக்கு முரணானது என்றாற்போல் எண்ணுவதும், பேசுவதும் நடப்பதும் தவறான போக்கு ஆகும்.

அடிப்படைகள்

1. சூழலியல் சீர்கேடுகளால் பெண்களே அதிக பாதிக்கப்படுகிறார்கள். சூழலியல் சீர்கேடு நிகழும் போது பெண்கள் அடிப்படைத் தேவைகளான உணவுக்காகவும், நீருக்காகவும் அதிக நேரம் செலவழிக்க வேண்டியவை. ஏற்கனவே பாலினம் சார்ந்த ஊதியம் ஏற்றத்தாழ்வு இருக்கும். சமூகத்தில் சூழலியல் மாசுபட்டுவிடுகிறது.

2. பெண்களுக்கான வருமானம் ஊட்டச்சத்து, உடல் நலம் போன்றவை குறைகின்றன. குறைபாடு அடைகின்றன. அவர்களின் சமூக உறவுகள் துண்டிக்கப்படுகின்றன.

3. சூழலியல் பேரிடர்கள் நிகழும் போது பெண்கள் குழந்தைகளின் பாதுகாப்பு கேள்விக் குறியாகிறது.

4. பெண்களுக்கும் இயற்கைக்குமான பிணைப்பு இயல்பாகவே ஆண்களை விடப் பெண்கள் மீது அதிகமான பிணைப்பைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இவ்வாறு பெண்களைப் பற்றிய சிந்தனையையும் அவர்களின் இடர்பாடுகளையும் நமக்கு இவ்வடிப்படைகள் வெளிப்படுத்துகின்றன.

மனித சமூகம்

தனியாக வாழாமல் கூட்டத்தோடு கூடி வாழும் இயல்புடையவன் மனிதன் என்பதால் மனிதனை ஒரு சமூக விலங்கு என்றே அரிஸ்டாட்டில் குறித்தார். தன்னுடைய தேவைகளுக்காகவும், பாதுகாப்புக்காகவும்; சுகத்துக்காகவும், வாழ்க்கை வசதிக்காகவும், பிற தேவைகளுக்காகவும், ஏனைய மனிதர்களோடு சேர்ந்து வாழ வேண்டிய கட்டாயம் அவனுக்கு இருக்கிறது.

கூட்டமாக வாழும் இயல்புகள் கொண்ட விலங்குகள் கூட இருக்கின்றன. அவற்றுக்கு இடையேயும் பாலுணர்வு, உணவுத் தோட்டம், பாதுகாப்பு முதலான தேவைகள் உள்ளன. எனினும் மனித விலங்கிடையே கண்டுபிடிக்கப்பட்ட மொழி அறிவும், சிந்தனையும் அவற்றுக்குக் களமாக இருந்த மூளையும் பகுத்தறிவும் மனிதரிடையே சமூக அமைப்பை மிகவாக வலுப்படுத்தி உள்ளன. தம்மைப் பாதுகாத்துக் கொள்வதும் பண்பாட்டை வளர்த்துக் கொள்வதும் சமூக அமைப்பால் சாத்தியம் ஆயின. அதே போல் ஆண்களுக்கு மட்டும் அல்ல பெண்களின் சிந்தனைப் பற்றியும் நம்மை இச்சமூகம் பார்க்க வைக்கிறது. வீடு முதல் அலுவலகம் வரை பெண்ணின் சிந்தனை வெளிப்படுகிறது.

*பாரதியின் பார்வையில்*

*பெண்மை என்பது அடிமையின் அடையாளம் அல்ல; பெண்கள் மதிக்கப்படுதல் வேண்டும். மோகத்திற்கு மட்டும் பெண்கள் உரியவர்கள் என்ற எண்ணம் ஒழிய வேண்டும். கல்வி, வேலை வாய்ப்பு, அரசியல், ஆட்சியில் சம உரிமை, பெண் குழந்தைகள் பாதுகாப்பு கிடைக்கப் பெறுதல் வேண்டும் என்பது தான் பெண்கள் வேண்டும் உரிமை.*

*இவை கிடைக்கத்தான் காலந்தோறும் பெண்கள் போராடி வந்துள்ளனர். 'மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய்' என்று உறுதியான உரிமைக்குரல் எழுப்பிய ஆண்டாள் நாச்சியாரைப் போலப் புதுக்கவிஞர்களும் பெண்ணியத்திற்காகக் குரல் எழுப்பியுள்ளனர்'.*

*பாரதியாரின் காலச்சூழலைப் பொறுத்தவரையில் அவருடைய பெண் பற்றிய சிந்தனை என்பது முரண்பட்டதாகவே இருக்கிறது. அதாவது அன்றையக் காலக்கட்டத்தில் பெண்கள் வீட்டிற்குள் அடக்கப்பட்டிருந்தனர் என்பதை உணர்ந்ததால்தான் அதனை எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு நேர்ந்துள்ளது. அதனால் அவர் புதுமைப்பெண் எப்படி இருக்க வேண்டம் எனப் பட்டியலிடுகிறார்.*

*பெண்ணைத் தெய்வமாக காணுதல், தெய்வத்தைப் பெண்ணாகக் காணுதல், புதுமைப் பெண்ணைக் காண விரும்புதல், பெண்ணின் அழகைப் போற்றுதல் ஆகியன இவரது பெண் வருணனைக்கான அடித்தளங்களாக அமைந்துள்ளன. இவற்றின் மூலம் பாரதியார் இந்திய மரபு சார்ந்த பெண்ணைப் படைப்பதில் ஆர்வம் காட்டியுள்ளதை உணர்ந்து கொள்ள முடிகிறது.*

*கற்பு என்பது ஆணுக்கும் வேண்டற்பாலது என்ற சிந்தனையை முதல் முதலில் பாரதியார் எடுப்பதன் மூலம் ஆணும் பெண்ணும் சமம் என்ற பெண்ணியச் சிந்தனையை அவர் முன் வைத்ததாகக் கருதலாம். பாரதியின் பெண், ஆண்களுக்கு நிகரானவள், உரிமை மிக்கவள், பெருமை மிக்கவள், வையகத்தைப் புதுமையுறச் செய்பவள், கலியை அழிப்பவள், உலக நுட்பம் தேர்பவள், காதலன் ஒருவனைக் கைப்பிடிப்பவள், அவனுக்குத் தோள் கொடுத்து துணையாக நிற்பவள்.*

*இவரின் புதுமைப் பெண், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய பெண்மைக் குணங்களைத் தவிர்ப்பவள் அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு? என்ற வினாவிற்கு விடையாக "பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும்" விரும்புபவர்கள் என்கிறார். பாரதியின் சிந்தனைகளைப் பார்க்கும் போது, பாரதியிடம் உணர்ந்துகொள்ள முடிகிறது. பெண்கள் மீதான சமூகத்தளைகள் களைந்தெறியப்பட வேண்டும் என்ற வேட்கை பாரதியாரிடம் அதிகமாக இருந்தது என்பதைக் கூட பெண்கள் விடுதலைக் கும்மி என்ற பாடல் மூலம் அறிய முடியும்.*

*"கும்மியடி தமிழ்நாடு முழுவதுங்*
*குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி*
*நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின*
*நம்மை கண்டோ மென்று கும்மியடி....*
*ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்*
*றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்"*

*" வீட்டுகுள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும் விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்" என்று கனவு கண்ட பாரதியார். ஆனால் அவர் காண விரும்பிய பெண் விடுதலை இன்னும் முழுமையாகக் கிடைக்கவில்லை.*

*பெண்ணியச் சிந்தனையின் தோற்றக் காரணிகள்*

*பெண்ணியச் சிந்தனைகள் உருவாவதற்குச் சமூக அமைப்பும் அடிப்படைக் காரணியாக அமைகிறது. ஆசிரியர்கள் வரவுக்கு முன்பே இந்தியச் சமூக அமைப்பில் தாய் வழிச் சமூக அமைப்பே இருந்தது என்பதை ஒத்து கொள்கிறது.*

*"தாய் வழிச் சமூகம் சமூக ஆய்வு மற்றும் மீட்பு நிலை அமைப்பு ஒரு காலத்தில் தாய்வழிச் சமூக அமைப்பே இருந்தது என்பதை ஒத்துக் கொள்கிறது. இச்சமூக அமைப்பில் ஆண்களை விடப் பெண்கள் உயர்நிலையில் இருந்தனர். பெண்கள் போற்றப்பட்டனர். அனைத்துத் தொழில்களிலும் பெண்கள் ஈடுபட்டிருந்தனர். பெண்ணியத் தோற்றச் சிந்தனைகளின் அடிப்படையில் கூறினால், பெண்ணியம் என்பது ஒரு சமூக சீர்திருத்த இயக்கம்; பகுத்தறிவு இயக்கம்; இவற்றை எல்லாம் உள்ளடக்கிய இலக்கிய இயக்கம் எனலாம்.*

*பெண்ணும் திருக்குறளும்*

*பெண்ணிற்கு மிகப் பெரிய பொறுப்பைத் தருகிறார் வள்ளுவர். பெண்ணை மிக உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றுகிறார். பெண் என்பவள் யார் என்ற கேள்விக்கு வள்ளுவர் விடை தருகிறார்.*

*நற்குண நற்செய்கைகளை உடையவனைக் கணவனாகப் பெற்றால் அவன் மனைவி தேவர் உலகில் வாழ்வதைப் போன்ற பெருஞ்சிறப்பைப் பெறுவாள் என்று வள்ளுவர் கூறுகிறார். கணவன் நல்லொழுக்கம் இல்லாதவனாக இருந்தால் பெண்களின் வாழ்க்கை நரக வாழ்க்கையாக இருக்கும் என்பது அனைவரும் அறிந்த உண்மை.*

*பெற்றான் பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்*
*புத்தேளிர் வாழும் உலகு (குறள் 58)*

*விளக்கம்: பெண்கள் கணவரைப் பேணி, அவரது இதயத்தில் இடம் பெற்றால், வானுலகில் வாழும் தேவகணங்களால் அவர்கள் பெரிதும் சிறப்பிக்கப் பெறுவர் என்று வாழ்க்கைத்துணை நலம் அதிகாரத்தில் விளக்கயுள்ளார்.*

*மனைவி என்ற சொல்லுக்கு மனையை உடையவள் என்று பொருள். பொருள் தேடுவதற்காகக் கணவன் வீட்டுக்கு வெளியே பணியாற்றுகிறான். குழந்தைகளுக்கும் கணவனுக்கும் வீட்டில் இருக்கும் மற்ற உறவினர்களுக்கும் தேவையான உணவு தயாரிப்பது அவர்களின் நலத்திற்காக உழைப்பது போன்ற பணிகளில் ஈடுபட்டு மனைவி தன் குடும்பத்தைப் பராமரிக்கிறாள்.*

*மனைத்தக்க மாண்புடையவள் ஆகித்தற் கொண்டான்*
*வளத்தக்காள வாழ்க்கத் துணை. (குறள் 51)*

*விளக்கம்: மனையறத்திற்கு உரிய நல்ல பண்பு உடையவளாகித் தன் கணவனின் வருவாய்க்குத் தகுந்து வாழ்பவளே சிறந்த வாழ்க்கைத் துணை ஆவாள்*

*கற்பு என்னும் மன உறுதியுடையவளாக மனைவி இருப்பதைவிட ஒருவன் பெறக்கூடியது வேறு எதுவுமில்லை என்கிறார் வள்ளுவர். மகளிரைச் சிறையில் அடைத்து வைத்ததைப் போல் காவல் காப்பதனால் எந்தப் பயனும் இல்லை என்றும் அவர்கள் தாமாகவே தங்கள் மனவுறுதியால் தங்கள் கற்பைக் காப்பாற்றிக் கொள்வதே மிகவும் சிறந்தது என்றும் கூறுகிறார்.*

*“பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்*
*திண்மை உண்டாகப் பெறின் (குறள் 54)*
*சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்*
*நிறைகாக்கும் காப்பே தலை (குறள் 57)”*

*வள்ளுவரின் சிந்தனை எத்துனை அளவு என்று எண்ணிலடங்கா அளவிற்கு இருப்பது என்பதை வியக்கும் அளவு அவரின் பொதுமறை நூல் புலப்படுத்திவிடும்.*

*தொல்காப்பியத்தில் பெண்ணியம்*

*பல மாற்றங்கள் தவிர்க்க முடியாதவையாக இருந்தாலும் சில நம்பிக்கைகளும் விழுமியங்களும் தமிழ்ச் சமுதாயத்தில் தொன்று தொட்டுத் தொடந்து வழக்கத்திலிருந்து வருகின்றன. உதாரணமாக பெண்களுக்கு அச்சம், நாணம், மடம் என்பவை இன்றியமையாத நல்லொழுக்கங்கள் என்று தொல்காப்பியம் கூறுகிறது.*

*அச்சமும் நாணும் மடனும் முந்துறத்த*
*நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப (தொல்காப்பியம் களவியல் 8)*

*அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுவதும் நாணமும் (வெட்கமும்) ஒரு பொருளை அறிந்திருந்தும் அறியாதது போல் நடந்து கொள்ளும் அடக்கமும் (மடமும்) பெண்ணுக்கு என்றென்றும் முதன்மை நற்பண்புகள் என்று முன்னோர்கள் கூறுவதாகத் தொல்காப்பியர் கூறுகிறார். ஆகவே இவை மூன்றும் நெடுங்காலமாகவே பெண்களுக்குரியதாக கருதப்படுகிறது.*

*உயிரினும் சிறந்தன்று நானே; நாணினும்*
*செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று எனத்*
*தொல்லோர் கிளவி... ... (தொல்காப்பியம் களவியல் 23)*

*கற்பு என்ற சொல் கல் என்ற சொல்லை வேர்ச் சொல்லாகக் கொண்டுள்ளது. திருமணத்திற்கு முன் ஒருவனைக் காதலித்தால் அவனோடு உடலுறவு கொள்ளாமல்*

மனவுறுதியோடு இருப்பதும் அவனையே மணந்து கொள்வதில் உறுதியாக இருப்பதும் திருமணத்திற்குப் பிறகு கணவரை தவிர வேறு எவரையும் மனத்தாலும் கூட விரும்பாமலும் உடலுறவு கொள்ளாமல் இருப்பதும் கற்பு என்று கருதப்படுகிறது.

சுப்ரபாரதிமணியன் சிறுகதையில் காணப்படும் பெண்ணியச் சிந்தனை

சுப்ரபாரதி மணியன் சிறுகதைகளில் அன்றாடம் நிகழும் வாழ்வியல் நிகழ்வுகளை மட்டுமின்றி தொழில், குடும்ப வறுமை, இயற்கை புனைவுகள், சூழலியல் சிந்தனைகள் பெண்ணியம் போன்ற பல கதைகளில் பெண்களை தொடர்பு படுத்தி அழகுற எடுத்துரைக்கிறார்.

குடும்பத்தின் நிலை தாயை இழந்து, தந்தையை இழந்து, உறவுகள் இன்றி பல கோணங்களில் வறுமை வாட்டிய நிலையில் பெண் என்பதைப் பொருட்படுத்தாமல் அம்மாவாக, அக்காவாக, தம்பியாக, தங்கையாக பல உறவுகளில் தொழிலுக்குச் சென்று வருவாய் ஈட்டி வாழ்வை வாழ வேண்டும் எண்ணத்தை பல சிறுகதைகளில் விளக்கியிருப்பார்.

இதில் பனியன் கம்பெனித் தொழில், சாயப்பட்டறை, நெசவு, அலுவலகத் தொழில் தன்னை இழந்து வாழ வேண்டிய அவலநிலையை மேற்கொள்ளும் பெண்ணின் வாழ்க்கை நிலை காட்சியாக கண்முன் தோன்றும் அளவு சொற்நயத்துடன் காணப்பட்டிருக்கும்.

இவரின் கதைகளில் பெண்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இருப்பதை கதை படித்துணரும் போது நமக்கு விளங்கும். பெண் பற்றிய விளக்கங்கள் பல இருப்பினும் ஒரு தலை முறை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிப்பவர் என்ற பெருமையுடன் விளங்கும் பெண்கள் கிராம வாழ்க்கையோ, நகர வாழ்க்கையோ எவையேனும் ஒன்றில் சிக்கத் தவித்து கண் மூடும் வரை தன் குடும்பத்திற்காக இரத்த உறவிற்காக இன்னல்களை எதிர்கொள்ள வேண்டிய காலகட்டத்தில் தள்ளப்பட்டுவிட்டனர்.

தனது கடினங்களை ஒருபோதும் பொருட்படுத்தாமல் இக்கதைப் பெண்மாந்தர்கள் குடும்ப மரத்தை அசைத்துவிடாமல் பேணிக்காக்கின்றனர். உடலாலும், உடையாலும் பல கடினத்தை எதிர்கொள்கின்றனர். ஆண் சமூகம் பெண்ணை பொருளாக பார்க்கும் அளவு பாத்திரப்படைப்பு அமைந்து இருக்கும்.

வீட்டு வேலை செய்து தன் கணவர் கவனிப்பில்லாமல் தன் மக்கட்பேறுக்காக உயிர் போகும் வரை உழைப்பேன் என்று வெளிக்காட்டும் தன்னம்பிக்கை பாத்திரமும், வெளித்தோற்றத்தை அழகாக அலங்கரித்து உள்ளுக்குள்ளே இரத்தக்காயத்தோடு இருப்பது போல வலியோடு வாழ்க்கையை நடத்தும் பெண்களின் கதைத் தோற்றம், நிஜ வாழ்க்கையில் ஏதோ ஒரு மூளை முடுக்கில் வாழும் மனிதர்களின் உண்மைச் சம்பவமாக காணப்படும். இவை அனைத்தும் தன் வாழ்வில் நிகழக் கூடாது என்ற எண்ணத்தையும், பெண் என்பவளும் உயிருள்ள சதைப்பிண்டம் தான் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

தன் உடலை விற்று தன் இரத்த உறவை அத்தொழிலுக்கு ஈடுபடுத்தக் கூடாது. தன் துன்பம் தன்னோடு போகட்டும் என்ற எண்ணம் நம் அனைவர் மனதையும் சற்று உறைய வைக்கும் அளவு இருக்கும். தான் பெற்ற பிள்ளை கல்வி அறிவு பெற வேண்டும், நீண்ட ஆயுள் பெற வேண்டும் என்று தன் இரத்தம் சுண்டிப்போகும் அளவு உழைக்கும் பெண்ணின் குணம் ஆழ்ந்த சிந்தனைக்கு நம்மை அழைத்துச் செல்லும். ஒரு ஆணுக்கு இருக்கும் குடும்ப பாரத்தை விட ஒரு பெண் ஆணின் துணையின்றி வயது மூப்பின்றி பிறரின் துணையின்றி வாழும் நிலை என்ன என்பது உணர்வதால் பாதியும், தான் அந்த இடத்திற்கு வரும் தருணத்திலும் தான் முழுமையுற அந்த வலியின் உணர்வு புரியும். பெண்ணை இறைவனோடு ஒப்பிட்டாலும், செய்யும் தொழிலில் உள்ள கருவியோடு ஒப்பிட்டாலும் நிஜ வாழ்க்கையில் போராட்டமும் வலியும் தான் அதிகம் காணப்படுகிறது. எத்துனை பாரதி வந்தாலும் வெறும் வார்த்தையில் வாழும் பெண்ணியப் பெருமை தான். சராசரியான அன்றாட வாழ்வில் இருக்காது என்பதை வெளிக்காட்டும் விதமாக சுப்ரபாரதிமணியனின் கதையில் வெளிப்பட்டுள்ளது.

பெண்களின் உறுப்புகள் என்பது வெறும் ரத்தமும் சதையுமாய் இருப்பது தான் என்று எண்ணும் பொழுது அங்கு கலவிற்கு இடம் கொடுக்காது, பிறர் மனைவி மீதும் பிற பெண்கள் மீதும் எந்த ஒரு தவறான எண்ணமும் தோன்றாது. ஆனால் பெண்ணின் உறுப்புகள் என்றாலே அது கற்பை சூறையாடும் விலங்காய் மாற்றுகிறது.

அலுவலகமோ, பேருந்தோ, பள்ளிக்கூடமோ, பிறர் வீட்டில் செய்யும் வீட்டு வேலையோ பல கதைகளில் பெண்கள் சகித்துக் கொண்டு வாழ்வது போலவும், பிற கதாப்பாத்திரங்கள் காளியின் மறுஉருவத்திற்கு கொண்டு செல்லும் ஆக்ரோஷமாகவும் வெளிக்காட்ட வைக்கிறது.

ஒரு சில இடங்களில் பெண்கள் பிற ஆண்களின் மேல் மோகம் கொண்டும் காணப்படுகின்றனர். அதற்கு முக்கிய காரணமாக இருப்பது பணம் என்ற ஒன்று. இப்பணம் பத்தும் செய்யும் தான். பல பேச்சு வழக்குகளில் கேட்டிருப்போம தாய் தந்தையிரைத் தவிர வேறு எல்லாவற்றையும் பணம் செய்து விடும் என்று அது உண்மையான கருத்து போல் இவரின் கதையில் ஒரு சில கதாப்பாத்திரம் தன் உடலை வருத்தி பணத்தை பெற்று தன் இன்பத்திற்காக இல்லாமல் மக்கட்பேறுக்காக என்று வெளிப்படுத்திக் கொண்டு பெறுகின்றனர்.

பல அதிகாரிகளாலும் பெண்கள் தன் தேவை நிறைவேற வேண்டும் என்றும் நடந்து கொள்வது போலவும் கதை அமைந்துள்ளது. இதற்கு வேறு வழி இல்லை என்பதா இல்லை இப்படி இருந்தால் தான் இது கிடைக்கும் என்ற கட்டாயமா என்று சிந்திக்க வைக்கிறது.

பெண் அது வயது குறைந்த நபரா வயதில் அதிகமாக இருப்பவரா என்றெல்லாம் இல்லாமல் பெண் என்றாலே பாதுகாப்பு வேண்டும், இல்லை துன்புறுத்தப்படுவார்கள் என்பது போலவும் ஒரு சில கதைகள் அமையப்பெற்றுள்ளன. இதில் தர்மம் தலை காக்கும் என்பது போல பாதிப்பு என்ற தெரிந்த பெண்ணை பாதுகாக்க வேறு இடத்திற்கு கூட்டிச் செல்வதும், துணையாக ஏற்றுக் கொள்ளக் கூட நிலையில் இருக்கும் கதைகள் தர்மத்தை நினைவுப்படுத்துகிறது. சுப்ரபாரதிமணியனின் கதைகள் அனைத்தும் இயல்பும் எளிமையும் கொண்டு அமையப் பெற்றிருக்கிறது. சராசரியான ஒரு பெண் எவ்வித இடையூறுகளுக்கும் பொறுப்புகளுக்கும் ஆளாகிக் காணப்படுகிறாள் என்பதை வரிகளின் மூலம் காட்சியாக படிப்போர் மனதிற்கு காட்டியுள்ளார்.

முடிவுரை

அக்காலம் தொட்டு இக்காலம் வரை பெண்கள் பற்றிய பேச்சுக்கள்,. கவிதைகள், கட்டுரைகள், நூல்கள் என பல இயற்றியுள்ளனர். பெண் என்றால் பெருமைக்கு உரியவள் மட்டும் அல்ல தன் வாழ்க்கைத் துணை, தான் பெற்ற மக்கட்பேறு இவர்களுக்காக வாழ்வை தியாகம் செய்யும் அன்புப் போராளிகளாக சுப்ரபாரதிமணியன் கதைகளில் வெளிக்காட்டப்பட்டுள்ளது. மாற்றத்தை ஏற்படுத்த பல உணர்ச்சிவச வரிகளும் பேச்சுகளும் இருப்பின் செயலில் இல்லாது.

மேற்கோள்கள்

1. https/://.www.hindutamil.in
2. hppts/:www.britannica.com
3. from.m.dinamalar.com
4. முனைவர். தயாம்மாள் அறவணன், தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல், பதிப்பகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் C.P.T. வளாகம், தரமணி,
சென்னை- 600 113, முதற்பதிப்பு – 2002
5. அருணா, பாரதியார் கவிதைகள், பதிப்பகம், அருணா 12, 1st தெரு (இணைப்பு) வடக்கு ஜகன்னாதா நகர்,
வில்லிவாக்கம், சென்னை/ 600 049
முதற்பதிப்பு – December 2007
இரண்டாம் பதிப்பு – December 2009
மூன்றாம் பதிப்பு – மே 2011
6. முனைவர் செ. சாரதாம்பாள், பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாவது முதன்மைச் சாலை மையப் பல்தொழில் நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை -600 113
7. தி. ஆ. இராமகிருட்டிணன், திருக்குறள் உரைநயம், குமரன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தி. நகர். சென்னை- 600 017.
8. அடிகளாசிரியர், தொல்காப்பியம் பொருளதிகாரம், பதிப்பகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதல் பதிப்பு – 1985

********* ********* ********** ********* ********* ********** ********** **********